

# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு



இரா. அதியமான்

நிறுவனர்

நாள் :

எனவே, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் மேற்கு மாவட்ட தனித்தொகுதிகளில் அருந்ததியர்களை வேட்பாளர்களாக நிறுத்தக்கோரி கடிதம் எழுதுவது எனவும், மேற்கு மாவட்டங்களில் குறிப்பாக தனித்தொகுதிகளில் பேரவையின் கிளைகளை போர்க்கால அடிப்படையில் கட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

2. 23.05.2010 அன்று திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில், பேரவை செயற்குழு நிறுவனர் தலைவர் தலைமையில் கூடியது. செயற்குழுவில்,

1. தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில மாநாட்டில் கலந்து கொள்ள விடுக்கப்பட்டுள்ள அழைப்பு குறித்து.

2. பேரவையின் தலைமை நிர்வாகிகள் தமிழக முதல்வரை சந்தித்து வந்தது குறித்து.

3. நெல்லையில் வரலாறு மீட்பு மாநாடு நடத்துவது குறித்து.

4. கொ.மு.க.-வின் கள் ஆதரவான மே 27-ல் சிறை நிரப்பும் போராட்டம் குறித்து.

5. முல்லைப் பெரியாறு உரிமைகோரி மே 28-ல் ம.தி.மு.க. நடத்தவுள்ள மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளுவது குறித்து.

கூட்டப்பொருள்கள் முடிவு செய்யப்பட்டன.

செயற்குழு உறுப்பினர்கள் முன்வைத்த சிறப்பான ஆலோசனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில்,

1. தீண்டாமை ஒழிப்பு முன்னணி நடத்தவுள்ள மாநில மாநாட்டில் கலந்து கொள்வதெனவும்,

2. பேரவையின தலைமை நிர்வாகிகள் சித்தார்த்தன், சு.க. சங்கர், முத்துராக்கு ஆகியோரின் முயற்சிகளை மனதார பாராட்டி வரவேற்பதெனவும்,

3. நெல்லையில் வரலாறு மீட்பு மாநாடு குறித்து அடுத்த நிர்வாகக் குழுவில் பேசிக்கொள்வதெனவும்,

தலைமையகம் : அ-7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை - 641 041.

பேசி : 0422 - 2424721, 94430 - 84642 மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com



இரா. அதியமான்

நிறுவனர்


நாள் :

4. கொ.மு.க. கள்ளுக்கு ஆதரவாக சிறை நிரப்பும் நடத்தவுள்ள மே 27 அன்று அதே நேரம் அதே இடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்துவதெனவும்,

5. முல்லைப் பெரியாறு உரிமை கோரி ம.தி.மு.க. நடத்தும் மறியலில் கலந்து கொள்ள வேண்டாம் எனவும், தேவையெனில் தனிப்போராட்டம் நடத்திக் கொள்வதெனவும்,

முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

3. 03.06.2010 அன்று கோவையில் தலைமையகத்தில் பேரவையின் நிர்வாகக்குழு நிறுவனர் தலைவர் தலைமையில் கூடியது. நிர்வாகக்குழுவில்,

1. நெல்லை மாநாட்டில் அரசியல் கட்சிகளை அழைப்பது குறித்தும்,

2. தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் துணைத் தலைவராக நமது நிறுவனர் தலைவரை நியமித்ததற்கு நிர்வாகக்குழுவின் ஒப்புதல் கோரியும்,

3. பேரவையின் எதிர்கால வளர்ச்சிக்கேற்ற முறையில் நிர்வாகத்தை மாற்றி அமைக்கவும்,

கூட்டப்பொருள்கள் முடிவு செய்யப்பட்டன.

நிர்வாகக்குழு உறுப்பினர்களின் விவாதங்களின் அடிப்படையில் நெல்லை மாநாட்டில் எந்தவொரு அரசியல் கட்சியையும் அழைக்காமல் ஈரோடு செருப்பு தைப்போர் மாநாட்டைப் போல எழுச்சியுடன் பிரமாண்டமாக நடத்துவதெனவும்,

தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் துணைத்தலைவராக நம் நிறுவனர் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதை பாராட்டி வரவேற்பதெனவும்,

பேரவை நிர்வாகத்தை மாற்றியமைக்க நிறுவனருக்கு முழு அதிகாரம் வழங்குவதெனவும்,

முடிவுகள் எடுக்கப்பட்டன.

அதன்படி,



சாதி ஒழிப்பே !

சமூக விடுதலை !!

# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு




இரா. அதியமான்

நிறுவனர்


நாள் :

| | | |
|---|---|---|
| பொதுச்செயலராக | - | நீலவேந்தன் |
| நிதிச்செயலராக | - | சு.க. சங்கர் |
| அமைப்புச்செயலராக | - | சுப. இளங்கோவன் |
| கொள்கை பரப்பு செயலராக | - | பெருமாவளவன் |
| து. பொதுச்செயலராக | - | சித்தார்த்தன் |
| து. பொதுச்செயலராக | - | இளமதி |
| து. பொதுச்செயலராக | - | முத்துராக்கு |
| இளைஞரணி செயலராக | - | விடுதலை வீரன் |
| மகளிரணி செயலராக | - | வசந்தி |

ஆகியோரை நிறுவனர் முன்மொழிந்தார்.

நிறுவனர் தலைவர் முன்மொழிந்த நிர்வாகிகள் மாற்றப்பட்ட பட்டியலை கலந்து கொண்ட நிர்வாகிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ள நிர்வாகக்குழு பட்டியல் இறுதியாக்கப்பட்டது.

எனவே, இந்த நடவடிக்கை குறிப்புகள் தங்கள் கைகளுக்கு கிடைத்தவுடன், உடனடியாக தங்களது மாவட்ட செயற்குழுவை கூட்டி மேற்கண்ட தலைமைக் குழுக்களின் முடிவுகளை மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கு தெரிவித்து, அம்முடிவுகளை செயல்படுத்த உரிய முறையில் விவாதித்து பணியாற்றுமாறும், முடிவுகளை அனைத்து கிளைகளுக்கும் இயன்றளவு விரைவாக கொண்டு செல்லுமாறும் தோழமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி !

என்றும் சாதி ஒழிப்புப் பணியில்,

20-6-2010

(இரா. அதியமான்)

நிறுவனர் தலைவர்


தலைமையகம் : அ-7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை - 641 041.

பேசி : 0422 - 2424721, 94430 - 84642 மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com